**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்.**

**முன்னிலை:– திருமதி. M.சந்தோஷம், B.Sc., B.L.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கிருஷ்ணராயபுரம்.**

**2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15 ம் நாள் செவ்வாய்கிழமை**

**இடைக்கால மனு எண். 03/2024**

**in**

**அசல் வழக்கு எண். 34/2024**

ஜெ.சிவா .... மனுதாரர்/வாதி

**//எதிர்//**

1. காளீஸ்வரி
2. முரளி .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது இறுதியாக இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்ததில், மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.செல்வம் அவர்கள் ஆஜராகியும், 1,2 ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.சரவணன் அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பார்வையிடப்பட்டும், இது நாள்வரை எம் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

உரிமையியல் விசாரணை முறைசட்டம் கட்டளை 26 விதி 9 ன் கீழ் வழக்கறிஞர்/நீதிமன்ற ஆணையரை நியமித்து, நில அளவையர் மூலம் மனு சொத்தை நில அளவை செய்து, அதில் உள்ள அமைப்புகளை குறித்து வரைபடம் மற்றும் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுவின் சுருக்கம்:**

தாவா சொத்தானது கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், கள்ளப்பள்ளி கிராமம், சர்வே எண்.103/7B, 103/7C மற்றும் நத்தம் புல எண்.254/2 ஆகியவற்றில் அமைந்துள்ளது. மேற்படி சொத்து மனுதாரருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு, கிரையம் பெற்ற சொத்தாகும்.

**1.1)** தாவா சொத்தில் A மற்றும் B பட்டியல் சொத்து ஆதியில் மனுதாரரின் பாட்டனார் பிச்சைக்கு பாத்தியப்பட்டு, அனுபவத்தில் இருந்து, பின்னிட்டு அவரின் மகனான மனுதாரரின் தந்தை ஜெயமணி அனுபவித்து வந்து, தற்போது மனுதாரர் அனுபவித்து வருகிறார். C பட்டியல் சொத்து மனுதாரர் கடந்த 21.08.2017 ல் கிரையம் பெற்றார். அதில் மனுதாரர் வீடு கட்டியும், முன்வாசல், பின்கொல்லை என பயன்படுத்தியும், இதர சொத்தில் விவசாயம் செய்தும் வருகிறார். அதன்பேரில் சொத்துவரி மற்றும் மின் இணைப்பும் மனுதாரர் பெயரில் உள்ளது. தாவா A மற்றும் B பட்டியல் சொத்திற்கான பட்டா மனுதாரரின் தந்தை ஜெயமணி பெயரில் உள்ளது. ஆனால் அதில் பிச்சை மகன் ஜெயமணி என்பதற்கு பதிலாக பெரியசாமிபிள்ளை மனைவி ஜெயமணி என்று உள்ளது. அதற்காக மனுதாரர் தனி நடவடிக்கை எடுத்து வருகிறார்

**1.2)** மனுதாரரின் ஊரில் வசித்து வரும் 2ம் பிரதிவாதிக்கு மனுதாரரின் பேரில் உள்ள அரசியல் முன்விரோதம் மற்றும் காழ்ப்புணர்ச்சி காரணமாக, மனுதாரரின் சொத்தை அபகரிக்கும் கெட்ட நோக்கத்துடன், மனுதாரருக்கு தொல்லை கொடுத்துவருகிறார்கள். மேலும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மனுதாரரின் சொத்தை மோசடி செய்யும் எண்ணத்தில், சட்டத்திற்கு புறம்பாகவும், போலியாகவும் ஆவணங்களை ஏற்படுத்தி அதன் மூலம் பட்டா, மின் இணைப்பு, வீட்டுவரி ரசீதுகள் பெற முயல்வதாக மனுதாரருக்கு தெரியவந்ததினால், மனுதாரர் வழக்கறிஞர் மூலம் மேற்படி ஆவணங்களின் உண்மை தன்மை அறியாது வழங்க வேண்டாம் என வருவாய் துறையினருக்கும், ஊராட்சியினருக்கும் மற்றும் மின்சார அலுவலகத்திற்கும் அறிவிப்பு அனுப்பி உள்ளார். மேற்படி தகவலை அறிந்த எதிர்மனுதாரர்கள் குடும்பத்தினர் அனைவரும் சேர்ந்து மனுதாரரின் குடும்பத்தினரை அடித்து காயப்படுத்தியும் கொலை மிரட்டல் விடுத்தும் சென்றனர்.

**1.3)** எனவே மனுதாரர் தனது சொத்தை பாதுகாத்து கொள்ளவும், எதிர்மனுதாரர்கள் சொத்தை மனுதாரர் எவ்வித ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்று நிரூபணம் செய்ய, வழக்கறிஞர்/நீதிமன்ற ஆணையரை நியமித்து, நில அளவையர் மூலம் மனு சொத்தை நில அளவை செய்து, அதில் உள்ள அமைப்புகளை குறித்து வரைபடம் மற்றும் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு எதிர் உரையின் சுருக்கம்:-**

இம்மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய் மற்றும் உண்மைக்கு புறம்பானவையாகும். சட்டப்படியும், சங்கதிகளின்படியும் மற்றும் பொருண்மைகளின்படியும் ஏற்கத்தக்கதல்ல. மேலும் நிலைக்கத்தக்கதல்ல. இந்த எதிருரையில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளைத் தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். தாவா சர்வே எண்ணில் அமைந்துள்ள சொத்துகள் மனுதாரருக்கு கிரையப்படியும், பூர்வீகமாகவும் ஒரு போதும் பாத்தியப்பட்டது கிடையாது. ஜெயமணி என்பவர் ஆணா, பெண்ணா என்பது கூட தெரியாமல் கிடைத்த ஆவணங்களை கொண்டு மனுதாரர் மனு தாக்கல் செய்துள்ளார்.

**2.1)** தாவா சொத்தின் உரிமையோ, உரிமை மூலமோ மனுதாரரிடம் ஒருபோதும் இருந்ததில்லை. மனுதாரருக்கு கள்ளப்பள்ளி கிராமத்தில் நிலம் ஏதும் கிடையாது. மனுதாரரின் தந்தை ஜெயமணிக்கு நிலம் ஏதும் இல்லாததால் தான் இலவச வீட்டுமனை 2.45 செண்ட் நிலத்திற்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டது. மேலும் ஜெயமணி என்பவர் மனுதாரரின் தகப்பனார் என்று பட்டாவில் திருத்தம் செய்ய கோரிய மனு ஏற்கனவே நிராகரிக்கப்பட்டுவிட்டது. மேலும் மனுதாரரின் பட்டா மாறுதல் மனு ஏதும் தற்போது நிலுவையிலோ அல்லது விசாரணையிலோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. மனுதாரரின் தந்தைக்கு 3 பெண்கள் மற்றும் 2 ஆண்கள் வாரிசுகள் என்ற நிலையில், மனுதாரர் மட்டும் எவ்வாறு தனது பெயருக்கு இதர வாரிசுகளை சேர்க்காமல் பட்டா மாறுதல் கோர இயலாது.

**2.2)** தாவா A பட்டியல் சொத்து சர்வே எண்.103/7C ஹெக்.0.01.0 பொறுத்து, ஆதியில் ஒரு பெரியசாமி மனைவி ஜெயமணி என்பவருக்கு 1984ம் ஆண்டு வழங்கப்பட்ட தோராய வீட்டுமனை பட்டா மூலம் பாத்தியப்பட்டது என அரசு ஆவணங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி பெரியசாமி மனைவி ஜெயமணி என்பவர் பிள்ளை (சோளிய வெள்ளாளர்) சமுதாயத்தை சார்ந்தவர். ஆனால் மனுதாரரோ பள்ளர் இனத்தை சார்ந்தவர். சர்வே எண். 103 பெரும்பகுதி குறிப்பாக 103/7B தவிர ஏனைய உட்பிரிவுகள் அனைத்தும் பெரியசாமி மனைவி ஜெயமணி வகையறாவிற்கு பாத்தியப்பட்டது.

**2.3)** தாவா B பட்டியல் சொத்து சர்வே எண். 103/7B ஹெக்.0.36.5 பொறுத்து, ஆதியில் பட்டாபிராமய்யர் மற்றும் 106 பேருக்கு பாத்தியப்பட்டது. எனவே அதனை தலா 500 சதுரடிகளாக பிரித்து, விற்பனை செய்து, பலர் அனுபவித்தும் வருகின்றனர். தாவா B பட்டியல் சொத்திற்கு பெரியசாமி மனைவி ஜெயமணிக்கும் எந்வித தொடர்பும் இல்லாத நிலையில், மனுதாரர் தனக்கு கிடைத்த பொய்யான பட்டாவினை வைத்துக்கொண்டு வழக்கு தாக்கல்செய்துள்ளார்.

**2.4)** தாவா C பட்டியல் சொத்து சர்வே எண்.254/2 ஹெக்.0.01.14 பொறுத்து, ஆதியில் முனுசாமி என்பவர் இராணுவத்தில் பணியாற்றியதால், தோராய பட்டா வழங்கப்பட்டு, முனுசாமி மற்றும் அவரது வாரிசுகளுக்கு பாத்தியப்பட்டது. அவ்வாறு வாரிசுகள் இல்லை என்றால் மேற்படி பட்டா நிபந்தனைகளின்படி அரசாங்கத்திற்கு சென்று சேர வேண்டும் என்ற நிலையில், முனுசாமி இறப்பிற்கு பின்னர் அபகரிக்க வேண்டி, அவரது வயது மூப்பினையும், இயலாமையையும் மனுதாரர் சாதகமாக்கி கொண்டு, உயில் ஆவணத்தையும், பின்னிட்டு கிரைய ஆவணத்தை மனுதாரர் தனது பெயருக்கு ஏற்படுத்தி கொண்டுள்ளார். மேற்படி கிரைய ஆவணமானது நிபந்தனைகளின் படி செல்லத்தக்கதல்ல. எனவே நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரும் இம்மனு அசல் வழக்கிற்கு ஆதாரங்களை திரட்டும் நோக்கத்திற்காக மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

**3.** இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் மற்றும் ஆவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**4.** தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது, இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**5.** மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, மற்றும் இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன.

**5.1)** வழக்கு கோப்புகளையும், ஆவணங்களையும், இந்த நீதிமன்றம் கவனமாக பரிசீலிக்கிறது. மனுதாரர்/வாதி இந்த அசல் வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் வழக்கு தற்போது எழுவினா வனைவதற்கான வாய்தா போடப்பட்டு

நிலுவையில் உள்ளது. இந்நிலையில், மனுதாரர்/வாதி இந்த இடைநிலை மனுவை தாக்கல் செய்து, நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரியுள்ளார். இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்வு காணவேண்டியதாகும்.

**5.2)** வழக்கு கோப்பு மற்றும் இந்த இடைநிலை மனுவை இந்த நீதிமன்றம் பரிசீலித்ததில், இந்த மனு சொத்தானது மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்டதென்று நிரந்தர உறுத்துக்கட்டளை செய்ய வேண்டி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது குறித்து அறிய முடிகிறது. மேற்படி அசல் வழக்கு தற்போது எழுவினா வனைவதற்கான வாய்தா போடப்பட்டு நிலுவையில் உள்ளது. வழக்கு சொத்தை, மனுதாரர்/வாதி அனுபவித்து வருவதாக சொல்லப்படும் கூற்றை தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றவாணங்கள் மூலம் நிரூபணம் செய்ய வேண்டுமே தவிர, நீதிமன்ற ஆணையர் நியமனம் கோருவது ஏற்புடையதல்ல என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேலும், சொத்தின் சுவாதீனத்தை நிரூபிக்க வேண்டி நீதிமன்ற ஆணையர் நியமனம் கோருவது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மனுதாரர்/வாதியின் இந்த மனுவின் சுவாதீனம் குறித்து சாட்சியங்களை திரட்டுவதற்காக தாக்கல் செய்யப்பபட்டுள்ளதாகவே இந்த நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே, சாட்சியங்களை திரட்டுவதற்காக நீதிமன்ற ஆணையர், நியமனம் கோருவது சட்டபடி நிலைக்கதக்கதல்ல என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்து, நீதியின் நலன் கருதி இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,**

இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ம் தேதி என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

**ஒம்/- திருமதி.எம்.சந்தோஷம்,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**
**கிருஷ்ணராயபுரம்.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** – இல்லை.

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** – இல்லை.

**ஒம்/– திருமதி.எம்.சந்தோஷம்,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**
**கிருஷ்ணராயபுரம்.**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்.**

**முன்னிலை:– திருமதி. M.சந்தோஷம், B.Sc., B.L.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கிருஷ்ணராயபுரம்.**

**2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15 ம் நாள் செவ்வாய்கிழமை**

**இடைக்கால மனு எண். 03/2024**

**in**

**அசல் வழக்கு எண். 34/2024**

ஜெ.சிவா, வயது 42,
த/பெ.ஜெயமணி,
கள்ளப்பள்ளி தெற்கு,
கள்ளப்பள்ளி கிராமம்,
கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம். .... மனுதாரர்/வாதி

**//எதிர்//**

1. காளீஸ்வரி, வயது 37
க/பெ. முரளி,
2. முரளி, வயது 42,
த/பெ.முத்தையன்,

1, 2 எதிர்மனுதாரர்கள் முகவரி
கள்ளப்பள்ளி தெற்கு,
கள்ளப்பள்ளி கிராமம்,
கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம்.
.... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

உரிமையியல் விசாரணை முறைசட்டம் கட்டளை 26 விதி 9 ன் கீழ் வழக்கறிஞர்/நீதிமன்ற ஆணையரை நியமித்து, நில அளவையர் மூலம் மனு சொத்தை நில அளவை செய்து, அதில் உள்ள அமைப்புகளை குறித்து வரைபடம் மற்றும் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்த நாள் – 27.09.2024
மனு மீது வில்லை – ரூ.20.00

இம்மனுவானது இறுதியாக இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்ததில், மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.செல்வம் அவர்கள் ஆஜராகியும், 1,2 ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.சரவணன் அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பார்வையிடப்பட்டும், இது நாள்வரை எம் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவாணை**

1. இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.
2. செலவுத் தொகை இல்லை.

**சொத்து விபரம்**

A பட்டியல் சொத்து

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், கள்ளப்பள்ளி கிராமம் நன்செய் புல எண்.103/7C ல் ஹெக்.0.01.00 ஏர்ஸ் முழுவதும்.

B பட்டியல் சொத்து

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், கள்ளப்பள்ளி கிராமம் புஞ்செய் புல எண்.103/7B ல் ஹெக்.0.36.50 ஏர்ஸ் முழுவதும்.

C பட்டியல் சொத்து

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், கள்ளப்பள்ளி கிராமம் நத்தம் தோராய மனைவரிப்பட்டா எண்.425 க்கு உட்பட்ட நத்தம் புல எண்.254/2 ல் ஹெக்.0.01.14 ஏர்ஸ் உள்ள மனை மற்றும் அவற்றிற்கான மாமூல் தட நடை பாதை பாத்தியம் உட்பட

2025 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையிட்டு வழங்கப்பட்டது.

**ஒம்/– திருமதி.எம்.சந்தோஷம்,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**
**கிருஷ்ணராயபுரம்.**